செ. எண்: 052 30.5.20

<u>பத்திரிக்கைச் செய்தி</u>

# <u>மீட்கப்பட்ட குழந்தைத் தொழிலாளர்கள் சிறப்புப் பள்ளிகளில் படித்து 10-ஆம் வகுப்பு தேர்வுகளில் அதிக மதிப்பெண்கள் பெற்று சாதனை</u>

<u>மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் திரு. செல்லப்பாண்டியன் தகவல்:-</u>

படிக்க வேண்டிய வயதில் பள்ளி செல்லாமல் பலவித பணிகளில் ஈடுப்படுத்தப்பட்ட குழந்தைகள் மீட்கப்பட்டு தேசிய குழந்தைத் தொழிலாளர் திட்ட சிறப்புப் பள்ளிகளில் சேர்த்து பின்னர் முறையான பள்ளிகளில் சேர்க்கப்பட்டு உயர் வகுப்புகளில் நன்கு படித்து தற்பொழுது 10-ஆம் வகுப்பு அரசு பொதுத் தேர்வுகளில் அதிக மதிப்பெண்கள் பெற்று சாதனை படைத்து தேர்ச்சி பெற்றுள்ளனர் என்று மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் திரு. செல்லப்பாண்டியன் அவர்கள் தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது :-

தமிழகத்தில் குழந்தைத் தொழிலாளர் முறையை முற்றிலும் அகற்றிட தொழிலாளர் நலத்துறை தீவிர நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. மத்திய அரசின் தொழிலாளர் நலத்துறை உதவியுடன், தமிழகத்தில் 16 மாவட்டங்களில் தேசிய குழந்தைத் தொழிலாளர் திட்டம் என்ற பெயரில் சிறப்புத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகின்றது. இந்த மாவட்டங்களில் 14 வயதுக்குட்பட்ட வேலைக்குச் செல்லும் குழந்தைகளைக் கண்டறிந்து மீட்கப்பட்டு, சிறப்புப் பள்ளிகளில் சேர்க்கப்படுகின்றனர். இந்த சிறப்புப் பள்ளிகளில் படித்து, பின்னர் முறையான பள்ளிகளில் சேர்க்கப்பட்ட மாணவர்கள் இந்த ஆண்டு நடைபெற்ற 10-ஆம் வகுப்புக்கான அரசுத் தேர்வுகளில் அதிக மதிப்பெண்கள் பெற்று, தேர்ச்சி பெற்றுள்ளனர்.

சேலம் மாவட்டத்தில் வெள்ளி கொலுசு பட்டறை தொழிலிருந்து மீட்கப்பட்ட ஆர். உமா மகேஸ்வரி என்ற மாணவி 485 மதிப்பெண்களும், ரம்யா லட்சுமி 478 மதிப்பெண்களும், எஸ். தமிழ் செல்வி 463 மதிப்பெண்களும் பெற்று தேர்ச்சி அடைந்துள்ளனர். விருதுநகர் மாவட்டம் சிவகாசியைச் சேர்ந்த ரூபலட்சுமி 475 மதிப்பெண்கள் பெற்றுள்ளார். அதே ஊரைச் சேர்ந்த மரீஸ்வரன் 471 மதிப்பெண்கள் பெற்றுள்ளார். இவர்கள் இருவரும் சிறு வயதில் தீப்பெட்டி தொழிலில் ஈடுபடுத்தப்பட்டவர்கள். கிருஷ்ணகிரி மாவட்டம் தேன்கனிக் கோட்டை கிராமத்தைச் சேர்ந்த அகர்பத்தி செய்யும் தொழிலிலிருந்து மீட்கப்பட்ட பி. ஜோதி 474 மதிப்பெண்களும், லட்சுமிபுரம் கிராமத்தைச் சேர்ந்த குணாவதி 461 மதிப்பெண்களும் பெற்றுள்ளனர். சேலம் மாவட்டம் நரசுக்காடு கிராமத்தைச் சேர்ந்த நந்தகோபால் என்பவர் 471 மதிப்பெண்கள்

பெற்று, தேர்ச்சி பெற்றுள்ளார். இவர் சிறு வயதில் கயிறு திரிக்கும் தொழிலில் ஈடுபடுத்தப்பட்டிருந்தார். இதே போன்று தூத்துக்குடி, கோவை, கிருஷ்ணகிரி, வேலூர், தர்மபுரி, ஈரோடு, சேலம், விருதுநகர் ஆகிய மாவட்டங்களில் சிறப்புப் பள்ளிகளில் பயின்று பின்னர் முறையான பள்ளிகளில் சேர்க்கப்பட்ட 725 மாணவர்கள் 10-ஆம் வகுப்பில் தேர்ச்சி பெற்றுள்ளனர். இதில் 74 மாணவர்கள் 400 மதிப்பெண்களுக்கு மேல் பெற்றுத் தேர்ச்சி அடைந்துள்ளனர். மேலும் பல மாணவர்கள் அதிக மதிப்பெண்கள் பெற்று தேர்ச்சி பெற்றுள்ளனர் என்பது பாராட்டத்தக்கது.

மீட்டெடுக்கப்பட்ட குழந்தைத் தொழிலாளர்களுக்காக தமிழகத்தில் தற்பொழுது 384 சிறப்புப் பள்ளிகள் நடைபெறுகின்றன. இதில் 14464 குழந்தைகள் பயின்று வருகின்றனர். இதுவரை 70 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மாணவர்கள் சிறப்புப் பள்ளிகளில் படித்து, பின்னர் முறையான பள்ளிகளில் சேர்க்கப்பட்டுள்ளனர். இக்குழந்தைகள் தற்பொழுது உயர்நிலைப் பள்ளிகள், மேல்நிலைப் பள்ளிகள், கல்லூரிகள் மற்றும் தொழில்நுட்ப கல்லூரிகளில் நல்ல முறையில் பயின்று வருகின்றனர். சிலர் பொறியியல் பட்டம் பெற்றுள்ளனர். பலர் பல்வேறு அரசுத் துறைகளில் பணியாற்றி வருகின்றனர்.

ஏழ்மையில் வாழும் இந்த மாணவர்களின் உயர்கல்விக்கு உதவ விரும்புபவர்கள் 044-24326205 அல்லது 044-24349442, tnchildlabour@yahoo.com என்ற முகவரியில் தொடர்பு கொள்ளலாம் என்றும் மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் திரு. செல்லப்பாண்டியன் அவர்கள் கேட்டுக் கொண்டுள்ளார்.

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
சென்னை-9